## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பொதுப்பணித்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி கே.வளர்மதி, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு இ.கிருஷ்ணமூர்த்தி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினைத் தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.92

நாள் : 03.12.2020
சார்வரி, கார்த்திகை 18.
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். எஸ்3(4)/32141/2019, நாள் 10.07.2019.
3. அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள் 23.01.2020.

-----

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள், காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு இ.கிருஷ்ணமூர்த்தி, மின்கம்பியாளரின் மகள் திருமதி கே.வளர்மதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் சென்னை சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு வட்டம் அலுவலகத்தில் 20.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் அப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு (Matriculation) தேர்வில் மார்ச் 2006 –இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 11.09.1990 ஆகும் என்றும் தெரிவித்து, தனியர் திருமதி கே.வளர்மதி அவர்களின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 20.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்களின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திரு. இ.கிருஷ்ணமூர்த்தி, மின்கம்பியாளர் பொதுப்பணித் துறையில் பணியிலிருக்கும் போது 09.01.2007 அன்று காலமாகியுள்ளார். திருமதி கே.வளர்மதி அவர்களின் பிறந்த தேதி 11.09.1990 ஆகும். அரசு ஊழியர் திரு இ.கிருஷ்ணமூர்த்தி, இறந்து மூன்று ஆண்டுகளுக்குள், 11.09.2008 அன்று அவரது வாரிசுதாரர்/ இரண்டாவது மகளான திருமதி கே.வளர்மதி என்பவர் தனது கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணி வழங்க வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார். திரு இ.கிருஷ்ணமூர்த்தி காலமானபோது தனியரின் வயது 16 ஆண்டுகள், 3 மாதங்கள் ஆகும். பணிவேண்டி விண்ணப்பம் அளித்த 11.09.2008 அன்று நாளில் அவரது வயது 18 ஆண்டுகள். இளநிலை உதவியாளர் பணியில் 20.08.2018 அன்று சேரும் போது அவரது வயது 27 ஆண்டுகள், 11 மாதங்கள் ஆகும். தனியர் மார்ச் 2006–இல் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். பணி வழங்கக் கோரி விண்ணப்பித்த நாளில் தனியர் அப்பதவிக்குண்டான கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றுள்ளார். மேலும், தனியருக்கு பணி நியமன நாளுக்கு முன்னரே திருமணமாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,

நாள் 23.01.2020–ன்படி இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15–ல் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, திருமணமான பெண் வாரிசுதாரரான திருமதி கே.வளர்மதி என்பவருக்கு வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்யவும் மற்றும் பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பலன்கள் வழங்கவும் ஏதுவாக மேற்காண் சட்டத்தின் பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றைத் தளர்வு செய்ய வேண்டியுள்ளது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், திருமதி கே.வளர்மதி அவர்களுக்கு திருமணமானப் பின்னர் பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதால், தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 20.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திடவும் மற்றும் பணிநியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பலன்கள் அளிக்கவும் ஏதுவாக, தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58–இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தளர்வு செய்து, கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில், தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதிப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது பணியினை 20.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா. எண்.18305/ட்டி.1/2020, நாள் 21.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.31586/ஜி1/2020–1, நாள் 30.11.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசகன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தல்லைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.

திருமதி கே.வளர்மதி, இளநிலை உதவியாளர், (முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை–5 வழியாக)

மாநிலக் கணக்காயர், சென்னை–18.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/ பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை – 9.

இருப்பு கோப்பு / உதிரி.